Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, DECEMBER 24 2024

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 24, 2024 | ஒளி: 10 கதிர் 121 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE




## 3ஆம் தவணை ஜன.2 ஆரம்பம்

நாட்டின் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் 2024ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் 2025ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், அனைத்துப் பாடசாலைகளிலும் மூன்றாம் தவணை ஜனவரி 24ஆம் திகதியுடன் முடிவடையும் என்று கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

## புதிய உச்சத்தை எட்டியது CSE




கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 15,000ஐத் தாண்டியது, இது, திங்கட்கிழமை (23) காலை வர்த்தகத்தின் போது 15,027 என்ற சாதனையை எட்டியது.

அதே நேரத்தில், மிகவும் செயலில் உள்ள பங்குகளைக் கண்காணிக்கும் S&P SL20 குறியீடும் அதிகரித்து, 4,494ஐ எட்டியது. வருவாய் 4 பில்லியன் ஆகும்.



# 40,000 பொலிஸார் உஷார்


2024 நத்தார் பண்டிகை மற்றும் 2025 புதுவருடப் பிறப்பு கொண்டாட்டங்களை முன்னிட்டு, சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பெருந்திரளான மக்கள் பிரதான நகரங்கள் மற்றும் புறநகரப் பகுதிகளுக்கு வருகை தருவார்கள். நத்தார் பண்டிகையின் போது, கத்தோலிக்க தேவாலயங்களில் நடாத்தப்படும் விசேட ஆராதனைகளில் கலந்து கொள்வதற்காக அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு வருகை தரும் பொது மக்கள் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பிற்காகவும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நாடு பூராகவும் உள்ளடக்கும் வகையில், பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் அதிகமாக வருகை தரும் தேவாலயங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் பொது இடங்களை மையப்படுத்தி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதி அலுவலகத்தில்
## டிசெம்பர் 25 வரை நத்தார் கரோல்



ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி, தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22) ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

### வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை
## "வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்க"



■ பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மொட்டை விட்டு தாவினார் சந்திரசேன



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன சர்வஜன சக்தி கட்சியின் உறுப்புரிமையை, திங்கட்கிழமை (23) பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## ஆணிகள் அடிக்கப்பட்ட பலகையை வைத்து வழிப்பறி

வாகன கொள்ளையர்களின் பிடியில் சிக்கியுள்ளதாகக் கூறப்படும் மாலம்பே தொடக்கம் அம்பத்தளை வரையிலான சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் அப்பகுதி பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு திங்கட்கிழமை (23) பணிப்புரை விடுத்துள்ளார்.

இரவு நேரங்களில் அந்த வீதியில் பல பகுதிகள் இருளில் மூழ்கிக் கிடப்பதால், நள்ளிரவு பயணிக்கும் வாகனங்களை இரும்பு ஆணிகள் அடிக்கப்பட்ட பலகைகளை வீதியில் போட்டு, நடுவில் பெரிய கருங்கற்களை வைத்து வழிப்பறி செய்து கொள்ளையடிக்கின்றனர்.



தொடர்ச்சி P2

### முன்னாள் ஜனாதிபதிகளின்
## முப்படையினர் நீக்கம்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படை வீரர்களை திங்கட்கிழமை (23) முதல் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் முப்படைத் தளபதிகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




### போலி நாணயதாள்களுடன்
## திகனையில் 4 மாணவர்கள் கைது

பாடசாலை மாணவர்கள் நால்வரைக் கைது செய்த தெல்தெனிய பொலிஸார், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவர்களிடம் 5,000 ரூபாய் மதிக்கத்தக்க 57 போலி நாணய தாள்களை கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2


## மின்சாரம் தாக்கி 50 யானைகள் பலி



இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 50 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாகவும், அந்த சந்தர்ப்பங்களில் அனுமதியின்றி இலங்கை மின்சார சபையின் மின்சார எடுக்கப்பட்டதாகவும் மின்சார சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி மின்சாரம் எடுப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு பொதுமக்களின் ஆதரவு எதிர்பார்க்கப்படுவதாகவும் மின்சார சபை கூறுகிறது.

## ஆஜரானார் ஞானசார தேரர்; பிடியாணை மீள பெறப்பட்டது



இஸ்லாத்தை அவமதித்த மற்றும் மத நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலபட அத்தே ஞானசார தேரரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க திங்கட்கிழமை (23) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## தரமற்ற 13 வகையான மருந்துகள் அகற்றம்



இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மேலும் 13 வகை மருந்துகளை பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் மற்றும் சிவில் உரிமைகள் சங்கத்தின் தலைவர் டொக்டர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### ஹட்டன்– மல்லியப்பு பஸ் விபத்து:
## படுகாயமடைந்த எழுவரின் நிலைமை கவலைக்கிடம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்- மல்லியப்பு பகுதியில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தில் காயமடைந்து, கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள எழுவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை (21) இடம்பெற்ற இந்த சம்பவத்தில், மூவர் உயிரிழந்தனர். நடத்துநர், சாரதி உட்பட 52 பேர் காயமடைந்தனர். அவர்களை அனைவரும், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். படுகாயமடைந்த எட்டு பேர், கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## கெசல்கமுவ ஓயாவை அளவீடு செய்ய முயன்றோர் விரட்டியடிப்பு



■ எஸ்.சதீஸ்

காலச் ரீ நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ டின்சின் பகுதியில் உள்ள கெசல்கமுவ ஓயாவை அனுமதியின்றி அளவீடு செய்ய வந்த குழுவினர் தோட்ட நிர்வாகத்தினரால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் திங்கட்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

நோர்வூட் பிரதேச சபை மற்றும் தெரேசியா தோட்ட நிர்வாகம் ஆகியோரிடம் எவ்வித அனுமதியும் பெறாது சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வை மேற்கொள்ள கெசல்கமுவ ஓயாவை அளவீடு செய்யும் பணியில் வெளியாரை அழைத்து வந்து மேற்கொண்ட போதே அந்த குழுவினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# திகனையில் 4 மாணவர்கள் கைது

திகன பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெல்தெனிய பொலிஸாருக்கு அறிவித்ததன் பிரகாரம் குறித்த மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு மாணவர்களும் திகன பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு வந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட 5000 ரூபாய் நாணயத்தாள் போலியானது என உணர்ந்த வர்த்தகர் இது தொடர்பில் தெல்தெனிய பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் 15-16 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களிடம் நடத்திய விசாரணையில், தெரிந்த மாமா ஒருவர் பொருட்களை வாங்க இந்த நோட்டுகளைக் கொடுத்ததாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# 40,000 பொலிஸார் உஷார்



இதற்கமைய, இலங்கை பொலிஸாரால் விசேடமாக கொழும்பு நகரத்தை மையப்படுத்தி மேலும் மேல் மாகாணத்திலுள்ள பொது இடங்களின் பாதுகாப்புகள் மற்றும் போக்குவரத்து திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், பண்டிகைக் காலங்களில் போக்குவரத்து கடமைக்காக 600 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் 553 பெண் உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 6,500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கட்டளையில் ஈடுபடுத்துவதற்காக பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் போது பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் 500 இந்கும். மேற்பட்ட உத்தியோகத்தர்கள் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுத்தவும் புலனாய்வுப் பிரிவினரும் கடமைகளில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இக்கடமைகளுக்காக 48 பொலிஸ் உயர் அதிகாரிகளும் 769 பொலிஸ் பரிசோதகர்கள் நிலையிலுள்ள உத்தியோகத்தர்களும் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றித்திரியும் திருடர்கள் மற்றும் ஏனைய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்வதற்கான முறைமையும் நடைமுறையில் உள்ளது.

பண்டிகைக் காலங்களில் தங்களின் தேவைகளுக்காகப் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் உரிய போக்குவரத்து விதிமுறைகளை அவதானத்துடன் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# டிசெம்பர் 25 வரை நத்தார் கரோல்


நத்தார் கரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலக வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு இலங்கை இராணுவத்தின் பாடல் குழு மற்றும் இசைக் குழுவினரால் நத்தார் கரோல் கச்சேரி நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சி டிசெம்பர் 25ஆம் திகதி வரை தினமும் இரவு 7.00 மணி முதல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை விமானப்படையின் பாடல் மற்றும் இசைக்குழு இணைந்து கிறிஸ்துமஸ் கரோல் இசை நிகழ்ச்சியை திங்கட்கிழமை (23) நடத்தியுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற கரோல் இசை நிகழ்ச்சியை நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் நஜித் இந்திக்க, லக்மாலி ஹேமச்சந்திர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

# தரமற்ற 13 வகையான மருந்துகள் அகற்றம்



கடந்த வாரம் 8 மருந்து வகைகள், இவ்வாரம் ஐந்து மருந்து வகைகள் உள்ளடங்கலாக பதின்மூன்று மருந்து வகைகள் இவ்வாறு அகற்றப்பட்டுள்ளதாகக் கூறும் நிபுணர் வைத்தியர், நீக்கப்பட்ட 8 வகையான மருந்துகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான மருந்துகளை கொண்டு வந்தவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் சுமார் 300 மருந்து வகைகள் பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும், நிமோனியா, மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட பல தொற்று நிலைமைகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் சமல் சஞ்சீவ கூறியுள்ளார்.

ஒவ்வொரு வாரமும் இவ்வாறு தரமற்ற மருந்து வகைகள் அகற்றப்படுவதாகவும், ஆனால் இந்த மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பில் பணியாற்றிய அதிகாரிகள் தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான வேலைத்திட்டமொன்றை ஸ்தாபிக்க முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வாரமும் தரம் குறைந்த மருந்துகளை அகற்றுவதனால் நாட்டின் கருவூலத்திற்கு பாரிய பிரச்சினை ஏற்படும் எனவும் தற்போதைய சுகாதார அமைச்சர் இவ்விடயங்கள் தொடர்பில் உடனடி கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களும் மருந்துகளை இறக்குமதி செய்யும் பொறிமுறையில் தலையிட்டு அடுத்த வருடம் இந்நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் இல்லையெனில், வெற்றிகரமான முறைமை மாற்றத்தை நம்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# "வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்க"

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜாவுக்கும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் மற்றும் சமூக மட்ட அமைப்பினருக்கும் இடையே விசேட கலந்துரையாடல் வைத்தியசாலையில் திங்கட்கிழமை(23) நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது மக்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலை தரத்தில் காணப்படுகிறது. ஆனால், அதற்குரிய ஆளணி வசதிகள் காணப்படுவதில்லை. இருப்பினும் கட்டிட வசதிகள் தாராளமாக உள்ளன.

கடந்த காலங்களில் 24 மணி நேர மருத்துவ வசதிகளும், சிகிச்சைகளையும் காணப்பட்டன. ஆனால், பின்னர் அவை எல்லாம் இடைநிறுத்தப்பட்டன. இருப்பினும் தற்போது கடமையில் இருக்கின்ற பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் முயற்சியால் மீண்டும் நோயாளர் விடுதி இயக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையை பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்துகின்றனர். 24 மணி நேர மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் மக்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும், சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கும் செல்ல வேண்டி ஏற்படுகிறது. அந்த வைத்தியசாலைகளில் விடுதிகளில் கட்டில் தட்டுப்பாடுகள், இடவசதி பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் எங்களது வைத்தியசாலையில் 24 மணி நேர மருத்துவ சேவையை ஆரம்பித்தால் மக்கள் அலைச்சல் இல்லாமல் இங்கே சேவையைப் பெற முடியும். அத்துடன், அந்த வைத்தியசாலைக்கு வேலைச்சுமை குறையும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள பொறுப்பு வைத்திய அதிகாரி எமது வைத்தியசாலைக்கு வருகை தந்து ஒன்றரை வருடங்களே ஆகின்றன. ஆனால், அவர் அந்த காலப்பகுதிக்குள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டுள்ளார். இன்னும் சிறிது காலம் அவர் எமது வைத்தியசாலையில் வேலை செய்தால், எமது வைத்தியசாலையின் சேவைகளை முழுமைப்படுத்தி விடுவார். அதன்பின்னர் யார் வைத்திய பொறுப்பதிகாரியாக வந்தாலும் அந்த சேவைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மக்களுக்கு சேவை செய்வதற்கே அனைத்து அரச திணைக்களங்களும், அரச அதிகாரிகளும் உள்ளனர். எனவே, மக்களாகிய எமது கோரிக்கைகளைச் செவிமடுத்து எமது வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முகமாகக் குறித்த வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இடைநிறுத்தி அல்லது தள்ளிப்போட்டு மக்களது நலனிலும் வைத்தியசாலையின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றனர்.

அத்துடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்துள்ளனர்.

மக்களின் கோரிக்கைகளை செவிமடுத்து பாராளுமன்ற உறுப்பினர், அவர்களது கோரிக்கை தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்தாலோசிப்பதாக உறுதியளித்துள்ளார்.

# மொட்டை விட்டு தாவினார் சந்திரசேன



அக்கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, அவருக்கு கட்சி உறுப்புரிமை வழங்கி, சர்வஜன சக்தி கட்சியின் தலைமைத்துவ சபைக்கு நியமித்தார்.

எஸ்.எம்.சந்திரசேன, 2001 முதல் 2024 வரை அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியதுடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளையும் வகித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயகக் கட்சியில் இணைந்து கொண்டார்.

# முப்படையினர் நீக்கம்

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவார்கள் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் போதுமான அளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டுப் பாதுகாப்பு நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஆணிகள் அடிக்கப்பட்ட பலகையை வைத்து வழிப்பறி

இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்களைக் கொள்ளையர்கள் கொள்ளையடிப்பதாக அப்பகுதி மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து ஆளுநர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க மாவத்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொலிஸ் ரோந்துப் பணிகளை அதிகரிக்கவும், வீதியின் நுழைவாயிலின் இருபுறமும் பாதுகாப்பை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளுநருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி. கேமரா அமைப்பு, மின்கம்பங்களை நிறுவுதல் மற்றும் தொடர்புடைய இடங்களில் பொலிஸ் சோதனைச் சாவடிகளை நிறுவுதல் ஆகியவற்றுக்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள இந்த பிரதேசத்தை முல்லேரிய மற்றும் மாலம்பே உள்ளூராட்சி சபைகளுக்கு மாற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# ஆஜரானார் ஞானசார தேரர்; பிடியாணை மீள பெறப்பட்டது

சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஞானசார தேரர் ஆஜராகாத காரணத்தினால் மேலதிக நீதவான் பசன் அமரசேனவினால் இந்த பிடியாணை கடந்த 19 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது.

ஞானசார தேரர் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (23) ஆஜராகியுள்ளார்.

சஞ்சய் ஆரியதாசவின் அறிவுறுத்தலின் பேரில் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இசுரு எதிரிசிங்க, வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருந்த கடந்த 19ஆம் திகதி சந்தேகநபர்,உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் இருந்ததால். நீதிமன்றில் ஆஜராக முடியாமல் போனதாக தெரிவித்தார்.

அவர் மீண்டும் வைத்தியசாலையில், செவ்வாய்க்கிழமை (24) அனுமதிக்கப்படுவார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2016 ஜூலை 8, அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இஸ்லாம் தொடர்பான அறிக்கை மத நல்லிணக்கத்தை மீறுவதாகவும், அதன்படி, குற்றவியல் சட்டத்தின் 291 (பி) பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் இழைக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்துடுள்ளது.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மேலதிக நீதவான், பிடியாணையை மீள அழைப்பதுடன், சந்தேக நபரை ஜனவரி 9ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

# படுகாயமடைந்த எழுவரின் நிலைமை கவலைக்கிடம்

அதில், ஒருவரின் நிலை தேறிவருவதாகவும், 7 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரியவருகின்றது.

பஸ்ஸின் சாரதி, சிறைச்சாலை காவலர்களின் பாதுகாப்பின் கீழ், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். அந்த வைத்தியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை (22) சென்ற ஹட்டன் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.ராம்மூர்த்தி, சாரதியை இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ல்லியப்பு பஸ் விபத்தில் சிக்கி, காயமடைந்து, டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் சிக்கிச்சைப்பெற்றவர்களில் பலர், வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கெசல்கமுவ ஓயாவை அளவீடு செய்ய முயன்றோர் விரட்டியடிப்பு

இதேவேளை, 27.09.2023ஆம் ஆண்டு பொகவந்தலாவ டின்சின் தொடக்கம் கிலானி வரை கெசல்கமுவ ஓயா சுத்தம் செய்யும் பணிக்கு முன்னாள் நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 14 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட போதும் குறித்த பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

சுத்தம் செய்யும் திட்டம் இடை நடுவில் இடை நிறுத்தப்பட்டது.

இருந்த போதிலும், குறித்த ஆற்றில் மாணிக்கக்கல் படிமங்களை அகழ்வதற்குத் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையும் அனுமதியினை வழங்கி இடை நடுவில் அதற்கான அனுமதியை நிறுத்தியது நாட்டில் தற்போது ஆட்சி மாற்றம் இடம் பெற்ற போதும், நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக கெசல்கமுவ ஓயாவில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் முதற்கட்டம் நிறைவடைந்துள்ளதாகவும் மாணிக்கக்கல் அகழ்வதற்குக் கால அவகாசம் போதுமானது இல்லை எனவும் அதனால் அகழ்வு செய்யப்பட்ட மண்ணை முறையாக நிரப்பும் பணி இன்னும் நிறைவடையவில்லை அதன்படி மண்ணை கழுவி முடித்து அது தொடர்பான வேளை திட்டத்தை நிறைவு செய்யும் கோரிக்கையை முன்னெடுப்பதற்கு அதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் கே.முரளிதரன் 09.10.2024 அன்று கடிதம் ஒன்றைச் சுற்றாடல் அதிகார சபை.தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபை. தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு, நிலம் சுரங்க சுற்றுச்சூழல் ஆகியோருக்கு கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே ஆற்றினை சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் குறித்த பகுதியில் இருந்து உடனே அகற்றுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# யானை தாக்கியதில் வீடுக்கு பலத்த சேதம்

ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ஆலங்கேணி பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) இரவு ஊருக்குள் நுழைந்த காட்டு யானை, வீட்டைத் தாக்கி பலத்த சேதம் ஏற்படுத்தியுள்ளது.

இரவு நேரத்தில் தனது பிள்ளையுடன் தூங்கிக் கொண்டிருக்கும் போதே குறித்த யானை தாக்குதல் இடம் பெற்றதாகவும் வீடு மற்றும் உடமைகள் சேதமாக்கப்பட்ட நிலையில் தான் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் அடிக்கடி யானை தொல்லை ஏற்படுவதால் நிம்மதியாகத் தூங்க முடியாது தவிர்க்கின்றதாகத் தெரிவித்த அப்பகுதி மக்கள் யானை தொல்லையில் இருந்து பாதுகாக்குமாறு உரிய அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## ஜனவரி முதல்

# Clean Sri Lanka

Clean Sri Lanka வேலைத் திட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

341 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை இலக்காகக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளதாகப் பிரதி அமைச்சர் ருவன் செனரத் குறிப்பிட்டார்.

இதனிடையே, Clean Sri Lanka வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பதில் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் இந்த செயலணியில் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களைத் தவிர, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும் இந்த செயலணியில் இடம்பெற்றுள்ளார்.

16 உறுப்பினர்களைக் கொண்ட இந்த செயலணியில் கலாநிதி அனுருத்த கமகே, கலாநிதி காமினி படுவிடகே உள்ளிட்டவர்கள் உள்ளடங்குகின்றனர். அந்த செயலணியில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒருவர் கூட இணைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 145ஆவது ஜெயந்தி நிகழ்வு

பகவானின் 145ஆவது ஜெயந்தியை கொழும்பு - பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பீடம், கொண்டாட உள்ளது. இந்நிகழ்வு, இல. 41, விவேகானந்தா வீதி, வெள்ளவத்தை ஞாயிற்றுக்கிழமை(29) பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பங்கேற்று அன்னை மலையாரின் இறையருளையும் பகவானின் குருவருளையும் பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

# கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்








கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அதற்கு காரணமானவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதேச செயலகத்தின் முன்னாள் உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை (23) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 20 ம் திகதி கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய வரும் கிராம உத்தியோகத்தர் கடமை நிமித்தம் தனது பிரதேசத்திற்குச் சென்று வரும் போது, சில நபர்களால் தாக்கப்பட்டதையடுத்து, அவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கிராம உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை, இந்த தாக்குதலைக் கண்டித்து பொலிஸாரை சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தின் முன்னாள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இதன் போது வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த பண்டார சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஆர்பாட்டகாரர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பாதிகரியிடமும் பிரதேச செயலாளரிடமும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

பொலிஸாரால் தலைமறைவாகி உள்ள சந்தேக நபரைத் தேடி விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்பாட்டகாரரிடம் உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

# காரைதீவு ஹரீஷ் லண்டனில் சாதனை

வி.ரி.சகாதேவராஜா



காரைதீவைச் சேர்ந்த இராஜேந்திரன் ஹரீஷ் லண்டனில் பிஎச்டி பட்டம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் .

காரைதீவில் பிறந்து லண்டனில் வாழ்ந்து வரும் ஹரீஸ் இளம் வயதிலே இப் பட்டம் பெற்றதைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

அவர் புற்று நோய் ஆராய்ச்சியில் PHD பட்டம் பெற்று, தோல் புற்றுநோய் சம்பந்தமான ஒரு புதிய கண்டுபிடிப்பும் செய்து சாதனை புரிந்துள்ளார்.

# ஐஸூடன் இருவர் கைது

பாறுக் ஷிஹான்

ஐஸ் போதைப்பொருட்களை வாடகை வாகனம் ஒன்றின் ஊடாக விநியோகித்த சந்தேக நபர்கள் இருவரை டிசம்பர் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை புறநகர் பகுதியில் சனிக்கிழமை(21) நள்ளிரவு சந்தேகத்திற்கிடமாக சென்ற வேன் ஒன்றை பின்தொடர்ந்த பொலிஸார் அந்த வேனை நிறுத்தி சோதனையிட்ட போது அதிலிருந்து ஒரு தொகுதி ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் அதில் பயணம் செய்த 24 வயது மதிக்கத்தக்க இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த வேன் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களான மருதமுனை பகுதியைச் சேர்ந்த இருவரும் ஞாயிற்றுக்கிழமை (22) மாலை கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டனர்.

அவ்விருவரையும் டிசம்பர் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன் மேலதிக விசாரணைகளைப் பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு; ஒருவர் கைது



பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குப் பின்னால் சூட்சுமமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட கசிப்பு தயாரிப்பு நிலையத்தைக் கடந்த சனிக்கிழமை(21) இரவு சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது மிகச் சூட்சுமமான முறையில் கசிப்பு தயாரிப்பு நிலையத்தை நடத்திச் சென்ற சம்மாந்துறை வீரமுனை 03 பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 80,000 மில்லி லீட்டர் கசிப்பு, 170,000 மில்லி லீட்டர் கோடா, 130,000 மில்லி லீட்டர் வடி, 210 லீட்டர் அடங்கக்கூடிய இரும்பு பரல் ஆகிய மீட்கப்பட்டுள்ளன.

மேலும், சந்தேக நபரிடமிருந்து சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய கசிப்பு தயாரிப்பு உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மற்றும் சான்று பொருட்கள் யாவும் சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாடியில் இருந்து விழுந்த மாணவன் படுகாயம்



பதுளை மத்திய வர்த்தக நிலையத்தின் இரண்டாவது மாடியில் பாதுகாப்பு இரும்பு பக்க வேலியை உடைத்து மாணவர் ஒருவர் கீழே விழுந்து பலத்த காயங்களுடன் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டாவது மாடியில் இருந்து 15 அடி கீழே விழுந்து படுகாயமடைந்தவர், பதுளை பசறை வீதி 2 கனுவா பகுதியைச் சேர்ந்த 7 வயதுடைய மாணவர் எனவும் அவர், பதுளையில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் 2ஆம் ஆண்டில் கல்வி கற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பதுளை நகரில் உள்ள ரேஸ்கோர்ஸ் வீதி மைதானத்தில் ரக்பி பயிற்சிக்காகத் தனது தாயாருடன் காலை சென்றதாகவும், பிற்பகல் தனது தாயாருடன் சில தேவைகளுக்காக பதுளை நகரிலுள்ள மத்திய வர்த்தக நிலையத்திற்கு வந்து இரண்டாவது மாடியில் இருந்ததாகவும் இரண்டாவது மாடியில் இருந்த இரும்பு வேலியில் மாணவன் சாய்ந்து இருந்த போதே அந்த கம்பிவேலி உடைந்து விழுந்து விட்டதாக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது என பொலிஸார் விழுந்து பலத்த காயங்களுடன் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# "பட்டங்களை சமர்ப்பித்து உத்தமம் காட்டவேண்டும்"

கனகராசா சரவணன்

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது பட்டம் மற்றும் தமது கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தங்களை உத்தமர்கள் என காட்டவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது, தங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பட்டப்படிப்பு பெற்றவர்கள் கல்வியாளர்கள் கடந்த அரசாங்கம் போல் அல்லாமல் நாங்கள் கல்வி மான்களை உள்ளடக்கியவர்கள் என்ற ரீதியில் ஆட்சிக்கு வந்தவர்களின் பட்டப்படிப்பு தொடர்பாக எழுந்த சர்ச்சையில் துரஷ்டவசமாக சபாநாயகர் இன்று இராஜனாமா செய்துள்ளார்.

நாட்டில் சில வேளைகளில் கலாநிதி பட்டங்கள் பணம் கொடுத்து பல்கலைக்கழகங்களில் பெறப்படுவது வழமையாக இருக்கின்றது. அது அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அதிகாரிகளும் கூட கலாநிதி பட்டங்களைப் பணம் கொடுத்துப் பெற்றுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. அந்தவகையில், வெளிநாடுகளில் பட்டம் பெற்று இன்று நாங்கள் படித்தவர்கள் என கூறிக் கொண்டு தங்களது பட்டங்களை தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் அதை நிரூபிக்க வேண்டிய காலகட்டமாக இருக்கின்றது.

உள்நாட்டிலே பட்டம் எடுத்தவர்களின் பட்டப்படிப்புக்கள் தற்போது கேள்விக்குட்படுத்தப்படுவதாக தெரியவில்லை ஆனால், வெளிநாடுகளிலே பட்டம் பெற்றவர்களது பட்டம் கேள்விக்குள்ளாக்படுகின்றது

எனவே கடந்த காலத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படிக்காதவன் முட்டாள், நான் படித்தவன் பட்டங்கள் இருக்கின்றது என வீரவசனங்கள் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடகிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களும் தமது கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தங்களை உத்தமர்கள் என காட்டவேண்டும் என்றார்.


## விற்பனைக்கு

கொத்தட்டுவ-கொலொண்ணாவ வீதி கட்டிடம் மற்றும் தனியார் வீதியை அனுகும் வாய்ப்புடன் கூடிய 28 பேர்ச் நிலம் விற்பனைக்கு உள்ளது. தொடர்புக்கு 070 7938 396

# அரிசி தட்டுப்பாட்டை நீக்குவதற்கு போதிய திட்டம் அவசியம்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரிசி தட்டுப்பாட்டு இன்னுமே நீக்கப்படவில்லை. தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. விரும்பிய அரிசியைக் கொள்வனவு செய்வதை விடவும், கிடைப்பதைக் கொள்வனவு செய்யும் நிலைமையே பல நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அரிசி ஆலைகளை அடியோடு தூக்கி எறிந்து விலையைக் குறைக்க அரசு முயற்சித்தாலும், அது முடியவில்லை. அரிசி ஆலை உரிமையாளர்களை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பல தடவைகள் அழைத்து அரிசி விலையைக் குறைக்குமாறு பணித்திருந்தார். ஆனாலும், அரிசி விலை குறையவே இல்லை.

இதனால், வீடுகளில் சமைத்துச் சாப்பிடுவோர் மட்டுமன்றி, மூவேளை உணவுகளையும் கடைகளிலேயே நம்பியிருப்போரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூடிய விலையைக் கொடுக்கவேண்டிய நிலைமையே பலருக்கும் ஏற்பட்டுள்ளது.

மக்கள் விரும்பியவாறு சுதந்திரமாகச் செயற்பட நமது நாட்டில் வாய்ப்பு உள்ளது. எனவே, அரிசி ஆலை உரிமையாளர்கள் தங்கள் விருப்பப்படி செயல்படுகின்றனரே தவிர, அரசாங்கத்தின் விருப்பப்படி செயல்படவில்லை.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நெருங்கி வரும் நிலையில் சந்தையில் கட்டுப்பாட்டு விலையில் அரிசி இல்லை. அனைத்து வகை அரிசிகளும் கட்டுப்பாட்டு விலையை விட 10 அல்லது 20 ரூபாய் அதிகம். அரிசியைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யும் போது கிலோவுக்கு 8 ரூபாய் நட்டம் ஏற்படுவதாகச் சில்லறை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நாட்டில் தற்போது இரண்டு முக்கிய பிரச்சனைகள் உள்ளன. முதலாவது அரிசி பிரச்சினை அடுத்த பிரச்சினை தேங்காய் தட்டுப்பாடு இந்த இரண்டு விவகாரங்களும் பாராளுமன்றத்தில் எப்போதும் விவாதிக்கப்படுகின்றன. வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதே மாற்றுப் பதில். ஆனால், அதுவும் சரியாக நடப்பதாகத் தெரியவில்லை. இக்கட்டான காலத்தில் அரிசி வரியை அரசாங்கம் நீக்கியிருந்தால் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். அதற்கு இன்னொரு பக்கமும் உண்டு. அரிசி வரி நீக்கப்படும் போது, தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கு அரிசி கொண்டு வந்து, களஞ்சியசாலைகளில் மறைத்து, அரிசி விலை உயரும் போது, விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தல் சபை தேசிய சொத்தாக இன்று இருந்திருந்தால் இலங்கை அரிசியில் தன்னிறைவு நிறைந்த நாடாக இருந்திருக்கும். திறந்த பொருளாதாரத்தால் அரிசி சந்தைப்படுத்தல் சபை அழிக்கப்பட்டது. திறந்த பொருளாதாரத்தின் அலையால் அடித்துச் செல்லப்பட்ட இதுபோன்ற பல தேசிய நிறுவனங்கள் இந்த நாட்டில் இருந்தன.

நெல் சந்தைப்படுத்தல் சபை நாட்டிற்கு மிகவும் தேவையான வளமாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் அதிக அளவில் கிடைத்த தானியம் அரிசி. எனவே, நெல் சந்தைப்படுத்தல் சபையை மறுசீரமைத்து இந்நாட்டின் அரிசி கைத்தொழிலைப் பாதுகாப்பது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அது வேறு; இது வேறு

**மொஹமட் பாதுஷா**

இலங்கையர் என்ற பொதுமைப்படுத்தலின் கீழ் அனைத்து மக்களையும் கொண்டு வருவதற்கும், அதன் ஊடாக ஒவ்வொரு சமூகத்தின் பிரத்தியேக பிரச்சினைகளையும் தனித்தனியாகக் கையாளாமல் ஒன்றாக, கலந்து விடுவதற்குமான எத்தனங்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

இது நல்ல முயற்சியே. ஆயினும், இதற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. அதாவது, இலங்கையர் என்ற பொதுவான அடையாளத்தின் கீழ் அனைத்துச் சமூகங்களும் ஒன்றுபடுவது மிக முக்கியமானது இது இலங்கையில் நீண்டகால தேவையாகவும் இருந்து வருகின்றது.

நல்லிணக்கத்துடன் ஒரே குடையின் கீழ் இணைவதன் மூலம் நிறைய விடயங்களை ஒரு தேசமாக வெற்றி கொள்ள முடியும். அந்த வகையிலான ஒரு மாற்றத்தை எதிர்பார்த்தே அனுரகுமார திசாநாயக்கவுக்கும் அவரது கட்சிக்கும் மக்கள் வாக்களித்தார்கள் என்பதையும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

ஆனால், இங்கு இன்னுமொரு விடயமும் இருக்கின்றது. இன, சமூக ரீதியான உரிமைகள், அபிலாஷைகளையும், இனப் பாகுபாடு, இனவாத சிந்தனை என்ற விடயத்தையும் ஒன்றுடன் ஒன்று போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அத்துடன், இன, மத, பிராந்திய அடிப்படையில் மக்களது பிரச்சினைகள் வேறுபட்டவையாக உள்ளன. அவை அந்தந்த வழிமுறைகளின் ஊடாகவே அணுகப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. அந்த நிலைமாறு கால வெற்றியின் பின்னர் பொதுவாக விடயங்களைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் முஸ்லிம்கள் தமது உரிமைப் பங்குகள் பற்றிப் பேசுகின்ற போது, இன அடிப்படையில் நோக்கக் கூடாது என்றும், முஸ்லிம் சமூகம் சில விமர்சனங்களை முன்வைக்கும் போது அதனை இனவாதம் என்றும், ஆளும் தரப்பினர் கூற முற்படுகின்றனர்

கடந்த காலங்களில் முஸ்லிம் கட்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெற்று, பின்னர் ஆளும் கட்சிக்கு முட்டுக் கொடுத்த எம்.பிக்களும் இதனையே செய்தனர். ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது 'பெட்டிகள்தான் எரிக்கப்படுகின்றன' என்றும், பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டபோது, 'அவை பள்ளிகளே அல்ல' என்ற தோரணையிலும், ஆட்சியை நியாயப்படுத்திய முஸ்லிம் எம்.பிக்களை கண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் கட்சிகளில் போட்டியிட்டு, சமூகத்தின் உரிமை என்றும், விடுதலை என்றும் பிரசாரம் செய்து பதவிக்கு வந்தவர்களின் நிலையே இதுவென்றால், இதுவரை மாகாண சபைக்குக் கூட தெரிவாகாமல், நேரடியாக தியவன்ன ஓயாவுக்கே போயுள்ள என்.பி.பி முஸ்லிம் எம்.பிக்கள், அரசாங்கத்தை நியாயப்படுத்த முனைவார்களாயின் அது குறித்து ஆச்சரியப்படவோ ஆவேசப்படவோ தேவையில்லை.

இதுவெல்லாம் நடக்கும் என்ற யதார்த்தத்தையும், இதனையெல்லாம் கடந்த பொதுப்படையான மாற்றமொன்று நிகழும் என்று எண்ணியே ஆளும் கட்சிக்கு வாக்களித்த முஸ்லிம்களும் தமிழர்களும் அந்த முடிவை எடுத்திருக்க வேண்டும்.

முஸ்லிம்களோ தமிழர்களோ சிங்கள மக்களோ தமது இனத்துவ, மத அடிப்படையிலான அடையாளங்களை அளவுக்கு அதிகமாகத் தூக்கிப் பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டைக் குழப்புவதற்காகக் காத்துக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு அது ஒரு துரும்பாக, ஆயுதமாக ஆகிவிடக் கூடும்.

ஆனால், அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக வந்து விட்டார் என்பதற்காக, 159 ஆசனங்களுடன் என்.பி.பி. ஆட்சி அமைத்து விட்டது என்பதற்காகச் சிறுபான்மைச் சமூகங்கள் நினைப்பதெல்லாம் எல்லாம் தன்பாட்டில் நடந்து விடும் என்று எண்ணியிருக்க முடியாது.

08 முஸ்லிம் எம்.பிக்கள் ஆளும் கட்சியில் இருக்கின்றார்கள்தானே அவர்கள் நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளை அறிந்து, புரிந்து, அதற்கான தீர்வுகளைத் தருவார்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு நம்பிக் கொண்டிருக்கவும் ஏலாது.

ஏனெனில், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் நூறு வருடங்கள் வரையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டவை. வடக்கு, கிழக்கின் பிரச்சினைகளும் ஏனைய மாகாண முஸ்லிம்களின் சிக்கல்களும் வித்தியாசமானவை. வெவ்வேறு அணுகுமுறைகள் தேவை.

அதிகாரங்கள் தேவை. கடந்த காலத்தில் இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன, அது எந்த இடத்தில் நிறுத்தப்பட்டது, எங்கிருந்து மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதை நீண்டகாலம் பதவியில் இருந்த ஒரு எம்.பி. அறிந்த, அனுபவப்பட்ட அளவுக்கு புத்தம்புதிதாக பாராளுமன்றத்திற்கு வந்த முஸ்லிம் எம்.பி. அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனைக் கற்றுக்கொள்ள நாளெடுக்கும்.

ஆகவே, ஜே.வி.பியின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட தேசிய மக்கள் சக்திக்குள் கட்டுக்கோப்புகள் எழுதப்படாத நியதிகள் இருக்கின்றன. இந்நிலையில் பாராளுமன்றத்திற்கு செல்வதற்கான அதிஷ்டத்தை வழங்கிய கட்சியின் நலனை உடைத்துக் கொண்டு, சமூகத்திற்காகக் குரல்கொடுப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, முஸ்லிம்களின் அமைச்சுப் பதவி பற்றி கேள்வி எழுப்பப்பட்ட கூட்டமொன்றில், ஆளும் கட்சியின் முஸ்லிம் எம்.பி. ஒருவரின் பிரதிபலிப்பு, முகபாவனை, செயற்பாடு எவ்வாறு இருந்தது என்பதையும் அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும் இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கக்கவை.

முன்னைய காலங்களில் முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களும் பெரிதாக ஒன்றும் செய்யலில்லை. அதேபோல்; பெரும்பான்மைக் கட்சிகளில் இருந்தவர்களும் ஆட்சியைக் காப்பாற்றும் வேலையைத்தான் செய்தார்கள் என்ற யதார்த்தத்தையும் முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி போன்றோர் மீது முஸ்லிம் மக்களுக்கும் இன்னும் முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவர்களுக்காகவே மக்கள் வாக்களித்தார்களே தவிர, ஜே.வி.பி. என்ற கட்சியையோ என்.பி.பி. என்ற வர்த்தக நாமத்தையோ நம்பி சிறுபான்மை மக்கள் வாக்களிக்கவில்லை.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நிறைய மாற்றங்கள் வந்துள்ளன. ஆனால், எதிர்பர்த்த இமாலய மாறுதல்கள் ஏற்படவில்லை. அதற்குக் காலம் எடுக்கலாம். அத்துடன், என்.பி.பி. வாக்குறுதியளித்த பல காரியங்களைக் கூடச் செய்வதில் பலத்த சவால்களை எதிர்கொண்டுள்ளது. அதுவெல்லாம் இயல்பானதே.

ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமை, அபிலாஷை சார்ந்த விவகாரங்களில் அரசாங்கமும் அமைச்சர்களும் எம்.பிக்களும் அதிகாரத் தோரணையில் நடந்து கொள்ளக் கூடாது. அதுவேறு - இதுவேறு என்பதை நேரிய மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் முடிவுகள் எல்லாவற்றையும் முஸ்லிம் சமூகம் விமர்சனக் கண்கொண்டு பார்க்கக் கூடாது. அது இனவாதம் என்று எடுத்த எடுப்பில் கருதுவதும் ஆரோக்கியமற்றது.

அதுபோலவே, முஸ்லிம்கள் தமது பிரச்சினையை, அபிலாஷையை முன்வைக்கும் போது, தங்களுக்குரிய பங்கைக் கோரும் போது, அதனை இனவாதம் என்று கூறி மட்டந்தட்டுகின்ற வேலையை என்.பி.பி. அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் செய்யக் கூடாது.


முஸ்லிம்கள் சார்பில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாததை எந்த வகையில் தர்மமாகக் கருத இயலாது. அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கு உரிய பங்கு மறுக்கப்பட்டதை நியாயப்படுத்த முடியாமல் அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருப்பது கண்கூடு.

இதனை ஏன் செய்யவில்லை என்று முஸ்லிம்கள் கோருவதை, 'முஸ்லிம்கள் இன அடிப்படையிலான கண்கொண்டு பார்க்கின்றார்கள்' என்று கூறக் கூடாது. விவகாரங்களைத் தமிழ், முஸ்லிம் கண்கொண்டு பார்க்க வேண்டாம் என்பது சரியே. ஆனால், இனம் சார்ந்த உரிமைகளுக்கு இந்த அறிவுரை பொருந்தாது. அதேவேளை, முஸ்லிம்களின் தனியார் சட்டம் தொடர்பாக என்.பி.பியின் முஸ்லிம் எம்.பிக்கள், சமயம், சட்டம், வைத்தியம் படித்தவர்கள் மௌனமாக இருக்க, ஏதோ இலங்கை முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினையே இதுதான் என்ற தோரணையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நியமிக்காமல், முஸ்லிம் சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடாமல், ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை முன்வைக்காமல் முஸ்லிம் சமூகத்தின் விடயத்தில் மூக்கை நுழைப்பதை முஸ்லிம் சமூகம் ஆட்சேபிப்பது இனவாதமாகுமா?

அதேபோன்று, மத்தியிலும் மாகாணங்களிலும் செயலாளர்கள், உயர்பதவிகளில் (தகுதி வாய்ந்த முஸ்லிம்கள் இருக்கும் பட்சத்தில்) தமக்குரிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்று கோருவதும், வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு கோருவதும் முஸ்லிம்களின் உரிமை இல்லையா? எனவே, அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இன்னும் நாம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். அத்துடன் சிறுபான்மை மக்களை விடச் சிங்கள மக்களை அவர்கள் அதிகம் திருப்திப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது என்ற யதார்த்தத்தையும் விளங்கிக் கொள்ளக் கூடாது.

ஆனால், முஸ்லிம்களையும் அவர்களது பிரச்சினைகளையும் பொதுமைப்படுத்திவிட்டு, அச் சமூகம் தமது உரிமைப் பங்குகள் பற்றிப் பேச விளைகின்ற போது, இனவாத முத்திரை குத்துவதையும் என்.பி.பியின் முஸ்லிம் எம்.பிக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விடயத்தை ஏனைய கட்சிக் காரர்களுக்கும் விளங்கப்படுத்த வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப வன்முறைகள் பலவிதமான முறைகளில் நடந்தபடி இருப்பது பலருக்குத் தெரியாது. மௌனமாகவே இருந்தபடி, குடும்பத்தில் ஒருவரைப் பலரும் இணைந்து தூற்றுவதை இரகசியமாகச் செய்வதுண்டு.

மனைவி பயந்த சுபாவமானவளாக, அப்பாவியாக இருந்தால், அவர் வாழ வந்த குடும்பத்தில் கணவனது உறவுக்காரர்கள் மிரட்டிப் பயமுறுத்தியும் கிண்டலடித்தும் அவரது மனத்தைக் காயப்படுத்திவிடுவார்கள். எதிர்த்துப் பேசினால் பொல்லாதவள் என்பார்கள்.

எடுத்ததற்கெல்லாம் குறை சொல்வதுடன், தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டு, அந்தப் பரிதாபமான இல்லத்தரசியைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவார்கள். குறைகளைச் சொல்லும்போது, தங்களுக்குள் மெல்லிய குரலில் இல்லாத பொய்களைச் சொல்வார்கள். ஆனால், வெளியுலகில் நடிப்பார்கள்.

சில வீடுகளில், மனைவியே கணவனைக் கௌரவமாக நடத்தாமல் இருப்பதுண்டு. எவர் மனதையும் சூட்சுமமான வழிமுறைகளில் துன்புறுத்துதல் அடாத செயலாகும். மௌன யுத்தம் குடும்பங்களில் நடக்கலாகாது.

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆசிரியர் பற்றாக்குறை

வவுனியா தெற்கு வலயத்தில் சுமார் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருக்கின்றது. அத்துடன், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளது. முக்கியமான பாடத்துறைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையானது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போது வட மாகாணத்தில் வழகங்கப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களின் போது, இதனை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

– க.அகரன்

‘அருணலு சித்திரம்’ சித்திரப் போட்டியில்

# வெற்றியாளர்களுக்கு வெகுமதி



கொமர்ஷல் வங்கி, தனது ஐந்தாவது ‘அருணலு சித்திரம்’ சிறுவர் சித்திரப் போட்டியை அண்மையில் மாபெரும் பரிசளிப்பு விழாவுடன் நிறைவு செய்தது. இந்த ‘அருணலு சித்திரம்’ சிறுவர் சித்திரப் போட்டியில் 137 சிறுவர் சிறுமியர் தமது கலைத்திறனை வெளிப்படுத்தியதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு 3 மில்லியன் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க மற்றும் வங்கியின் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நான்கு வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர் சிறுமியருக்காக பிரத்தியேகமாக, வங்கியின் பிரபல சிறுவர் சேமிப்புக் கணக்கான ‘அருணலு’ பதாகையின் கீழ் இந்தப் போட்டி நடத்தப்பட்டது, மேலும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைச் சிறுவர்களுக்கும் இப்போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கொமர்ஷல் வங்கி 137 வெற்றியாளர்களையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் பரிசளிப்பு விழாவிற்கு அழைத்தது. மூன்று வெளிநாட்டு வெற்றியாளர்களும் இணையத்தள நிகழ்வில் பங்கேற்று தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தலா ரூ.10,000 முதல் ரூ.100,000 வரை ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போட்டியில் வெற்றி பெற்றவர்களில் கொமர்ஷல் வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களின் பணப்பரிசில்களுக்கு மேலதிகமாக விசேட பரிசில்களைப் பெற்றனர். இந்த வருடத்திற்கான போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்ட சித்திரங்களுக்கான தீர்ப்பு வழங்கும் பொறுப்பு பேராசிரியர் சுசிறிபால மாலிம்பொட தலைமையிலான நிபுணர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொமர்ஷல் வங்கி ‘அருணலு சித்திரம் கலைப் போட்டியை 2017இல் அறிமுகப்படுத்தியது. கொமர்ஷல் வங்கியின் முதன்மையான சிறுவர்கள் சேமிப்புக் கணக்கான, அருணலு அதன் பிறகு போட்டிக்கு பெயரிடப்பட்டதையடுத்து, சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிக வட்டி வீதத்தை வழங்குவதுடன் மற்றும் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அவர்களின் பாடசாலைகளில் முதல், இரண்டாவது அல்லது மூன்றாவது அதிக உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு விசேட பணப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க மற்றும் வங்கியின் பெருநிறுவன முகாமைத்துவ பிரதிநிதிகளுடன் 2024 அருணலு சித்திரம் சிறுவர் கலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.

John Keells Properties மற்றும் யூனியன் வங்கி

# VIMAN ஜா-எலவில் வீட்டு உரிமைத் திட்டத்தை வழங்குகிறது




VIMAN ஜா-எல குடியிருப்புத் திட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்ய விரும்புவர்களுக்கு ZERO-DOWN வீட்டு உரிமைத் திட்டத்தை வழங்குவதற்கான கூட்டாண்மை John Keells Properties (JKP) நிறுவனத்திற்கும் யூனியன் வங்கிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வீட்டு உரிமைக்கான அணுகலை இலகுவாக்குவதில் இரண்டு தொழில்துறை முன்னணியாளர்கள் கொண்டுள்ள பகிரப்பட்ட உறுதிப்பாட்டில் இருந்து இந்த நிதித் தீர்வு உருவாகியிருப்பதுடன், இது VIMAN ஜா-எல குடியிருப்புத் திட்டத்தில் கொள்வனவு செய்ய விரும்புவர்கள் முன்பணம் செலுத்தும் சுமையின்றிக் கொள்வனவு செய்ய வசதியை ஏற்படுத்துகின்றது. ZERO-DOWN மூலம், யூனியன் வங்கி திட்ட நிதியில் 75% ஐ முற்பணமாக வழங்கும் என்பதுடன், பின்னர் கட்டம் கட்டமாக நிதி வழங்கப்படும். வாடிக்கையாளர்கள் வங்கியால் வழங்கப்பட்ட தொகைக்கு திட்ட காலத்தில் மாதாந்தம் சமமான தவணைகளை மட்டுமே செலுத்த வேண்டும்.

John Keells Properties நிறுவனம் மற்றும் யூனியன் வங்கியினால் இணைந்து வழங்கப்படும் ZERO-DOWN ஆனது வெறுமனே நிதித் தயாரிப்பு மாத்திரமன்றி, எப்போதும் இல்லாத அளவுக்கு VIMAN ஜா-எல திட்டத்தை அடையக்கூடியளவுக்கு ரியல் எஸ்டேட் துறையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன், அனைவருக்கும் வாய்ப்பு மற்றும் பாதுகாப்பை வழங்கும் உறுதிமொழியாகும். இளம் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் குடும்பங்கள் மத்தியில் நெகிழ்வுப்போக்கு மிக்க, மலிவான நிதியளிப்புக்கான தெரிவுகளுக்கான தேவை அதிகரித்து வருவதால், வீட்டுஉரிமையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இந்த தனித்துவமான தீர்வு காலத்தின் தேவைக்கு ஏற்ற ஒன்றாகும். ZERO-DOWN திட்டத்திட்டமானது VIMAN ஜா-எல குடியிருப்புத்திட்டத்தில் சாத்தியமான வாய்ப்புகளை எந்தவித முன்கூட்டிய செலவுகளும் இல்லாமல் பாதுகாக்க உதவுகிறது. இது குடியிருப்பைக் கொள்வனவு செய்பவர்களைத் தடுக்கும் ஆரம்ப நிதித் தடைகளைத் தகர்ப்பதுடன், கொள்வனவு செய்பவர்கள் தங்கள் நிதித் திட்டத்தை தெளிவு மற்றும் நம்பிக்கையுடன் அணுகவும் இது உதவுகின்றது.

ZERO-DOWN திட்டமானது இலங்கையில் வீட்டின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான தொலைநோக்கு அணுகுமுறையைப் பிரதிநிதித்துவம் செய்வதாக John Keells Properties நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தலைவரும், John Keells Group இன் பிரதித் தலைவருமான நதீம் ஷம்ஸ் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், “குடியிருப்புங்களை வாங்குவதில் உறுதியாக இருக்கும் பலருக்கு முன்பணத்திற்கான செலவு அதைரியப்படுத்துவதாக அமைகின்றது. எனினும், ZERO-DOWN திட்டத்தின் ஊடாக VIMAN ஜா-எல திட்டத்தில் தொடர்மாடிக் குடியிருப்பொன்றை வாங்க விரும்புவர்களுக்கு நெகிழ்வான நிதித் தன்மையை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். எமது அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக மாத்திரமன்றி வீட்டின் உரிமையை மக்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் புதிய உலகத்தை உருவாக்குவது என்ற கோட்பாட்டில் John Keells Properties நிறுவனம் அர்ப்பணிப்புடன் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது” என்றார்.

உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ZERO-DOWN திட்டத்தை நிறுவனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்துவதில் யூனியன் வங்கி பெருமை அடைகிறது” என யூனியன் வங்கியின் சாயா ஜயவர்தன, சிரேஷ்ட உப தலைவர், நுகர்வோர் வங்கியயில் தெரிவித்தார். “இந்த முயற்சியானது முன்பயணத்தைச் செலுத்துவது என்ற நிதி நெருக்கடி இன்றி நிதி நெருக்கடியின்றி நெகிழ்வுத்தன்மை மற்றும் நம்பிக்கையுடன் VIMAN ஜா-எல திட்டத்தில் வீடொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்” என்றார்.



# சாந்தமான த்ரிஷா

தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகியாக இருப்பவர் நடிகை த்ரிஷா. இவர் தற்பொழுது அஜித் நடிக்கும் விடாமுயற்சி மற்றும் குட் பேட் அக்லி திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

விடாமுயற்சி திரைப்படத்தை இயக்குநர் மகிழ் திருமேனி இயக்கியுள்ளார். திரைப்படம் வரும் ஜனவரி 10ஆம் திகதி வெளியாகவுள்ளது. படத்தின் டீசன் அண்மையில் வெளியாகி பெறும் வரவேற்பை பெற்றது.

இந்தநிலையில் த்ரிஷா அவரது சமூக வலைத்தள பக்கத்தில் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். அதில் மிகவும் வெள்ளை நிற ஆடையில் மிக அழகாகவும் சாந்தமாகவும் காட்சி அளிக்கிறார். அப்புகைப்படம் சமூக வலைத்தளங்களில் தற்பொழுது வைரலாகி வருகிறது.

திரிஷா தக் லைஃப், ஐடெண்ட்டிடி, சூர்யா 45, ராம் போன்ற திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இணையும்

# ஜெயம் ரவி, ஆர்த்தி?



நடிகர் ஜெயம் ரவி மற்றும் அவரது மனைவி ஆர்த்தி ஆகியோரின் விவாகரத்து வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இருவருக்கும் இடையிலான சமரச பேச்சுவார்த்தை இன்னும் முடியவில்லை என்று மத்தியஸ்தர் தரப்பிலிருந்து நீதிமன்றத்தில் அண்மையில் கூறப்பட்ட நிலையில், இருவரும் மீண்டும் சமாதான பேச்சுவார்த்தை நடத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜெயம் ரவி தனது மனைவி ஆர்த்தியிடம் இருந்து பிரிந்து விவாகரத்துக்காக சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், மனு மீதான விசாரணைக்கு இருவரும் நேரில் ஆஜராகினர்.

அப்போது, ஜெயம் ரவி மற்றும் ஆர்த்தி இடையே சமரச பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும், இன்னும் அந்த பேச்சுவார்த்தை முடியவில்லை என்று மத்தியஸ்தர் தரப்பிலிருந்து நீதிமன்றத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து, மீண்டும் சமரச மையத்தில் ஜெயம் ரவி மற்றும் ஆர்த்தி ஆகிய இருவரும் மனம் விட்டுப் பேசுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஜெயம் ரவி, ஆர்த்தி சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

வெங்கட் பிரபு, சிவகார்த்திகேயன்

# புதுக்கூட்டணி





இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்க இருக்கும் திரைப்படத்தின் தகவல் வெளியான நிலையில், வெங்கட் பிரபு அளித்த பேட்டியில், இந்த படத்தைத் தயாரிக்கும் நிறுவனம் குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவான ‘கோட்’ திரைப்படம் வெளியானதைத் தொடர்ந்து, அவர் அடுத்ததாக சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தை இயக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால், சிவகார்த்திகேயன் தற்போது ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். இதை அடுத்து, சுதா கொங்கரா இயக்கத்தில் ஒரு படத்திலும், ‘டான்’ இயக்குநர் சிபி சக்கரவர்த்தி இயக்கத்தில் மற்றொரு படத்திலும் நடிக்க உள்ளார்.

எனவே, வெங்கட் பிரபு இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்க இருக்கும் திரைப்படம் ஆரம்பமாக, இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அண்மையில் அளித்த பேட்டியில், “ ஏஜிஎஸ் நிறுவனத்திடம் ஒரு படத்தில் நான் கமிட் ஆகி இருந்தேன். அது சிவகார்த்திகேயன் படமாகத் தான் இருந்தது. ஆனால், அந்த கமிட்மென்ட் ‘கோட்’ படத்துடன் முடிந்து விட்டதால், சிவகார்த்திகேயன் படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனத்திற்காக இயக்க உள்ளேன்” என்று வெங்கட் பிரபு தெரிவித்துள்ளார்.



# ‘தி ஸ்மைல் மேன்’

சரத்குமார் நடிப்பில், அவரது 150ஆவது திரைப்படமாக உருவாகியுள்ள ‘தி ஸ்மைல் மேன்’, டிசெம்பர் 27ஆம் திகதி வெளியாகவுள்ளது.

மேக்னம் மூவிஸ் சார்பில் தயாரிப்பாளர் சலீல் தாஸ் தயாரிப்பில், இயக்குநர்கள் ஷ்யாம் – பிரவீன் இயக்கத்தில், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் நடிப்பில், அவரது 150ஆவது சிறப்பு திரைப்படமாக உருவாகியுள்ளது.

அம்னீஷியா நோயால் பாதிக்கப்படும், ஓய்வு பெற்ற ஒரு முன்னாள் காவல் அதிகாரி, தனது நினைவுகள் முழுதாக மறந்து போகுமுன், ஒரு சிக்கலான, மிக முக்கியமான வழக்கை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார். முழுக்க முழுக்க இன்வெஸ்டிகேசன் திரில்லர் பாணியில், பரபரப்பான திரைக்கதையில், எட்டு தோட்டாக்கள் வெற்றி நடிப்பில் மெமரீஸ் படத்தினை இயக்கிய ஷ்யாம் – பிரவீன் வெற்றிக்கூட்டணி இப்படத்தை உருவாக்கியுள்ளது.

‘ஜெயிலர் 2’

# படப்பிடிப்பு எப்போது?



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த ‘ஜெயிலர்’ படத்தின் இரண்டாம் பாகத்தின் பணிகளை இயக்குநர் நெல்சன் தொடங்கி விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில், நெல்சன் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அனிருத் இசையில் உருவான ‘ஜெயிலர்’ திரைப்படம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியான மிகப்பெரிய வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த படத்தின் இரண்டாம் பாகத்தின் ஆரம்பகட்ட பணிகள் கடந்த சில வாரங்களுக்கு முன் தொடங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தற்போது இயக்குநர் நெல்சன், லொகேஷன் தேடும் பணியைத் தொடங்கி விட்டதாகக் கூறப்படுகிறது.

கோவை மற்றும் கேரளா ஆகிய பகுதிகளில் இந்த படத்தின் படப்பிடிப்பு நடைபெறும் என்றும், அதற்கான லொகேஷன் தேடி வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும், வரும் ஜனவரிக்குள் ‘கூலி’ படத்தின் படப்பிடிப்பை ரஜினிகாந்த் முடித்து விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், மார்ச் மாதம் முதல் ’ஜெயிலர் 2’ படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், ’ஜெயிலர் 2’ படத்தின் ப்ரோமோ படப்பிடிப்பு அண்மையில் நடந்ததாகவும், ஜனவரி 1, புத்தாண்டு தினத்தில் ப்ரோமோ வீடியோ வெளியிடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கரோல் பக்தி கீத இசை...



நத்தார் பண்டிகையை முன்னிட்டு நீர்கொழும்பு பிரதேச செயலகத்தினால் வெள்ளிக்கிழமை(20) சகல மதத்தினரும் கலந்து கொண்ட கரோல் பக்தி கீத இசை நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

– எம்.இஸட்.ஷாஜஹான்



# நத்தார்...




இலங்கை தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன், புத்தளம் மாவட்ட சர்வ மதக் குழுவின் ஏற்பாட்டில் நத்தார் நிகழ்வு புத்தளம் சாந்த மரியா தேவாலயத்தின் வளாகத்தில் சனிக்கிழமை(21) நடைபெற்றது.

– எம்.யூ.எம்.சனூன்



# ஜனாதிபதி அலுவலகத்தில்...



ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி, தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22) ஆரம்பமானது.







# அன்னதானம் வழங்கும் நிகழ்வு



இன நல்லிணக்கத்துக்கும் இன ஒற்றுமைக்கும் அடையாளச் சின்னமாகத் திகழும் மட்டக்களப்பு கல்லடி உப்போடை நொச்சிமுனையிலுள்ள புலியம் போக்கர் அப்பா வலியுல்லாஹ் தர்ஹாவில் 119ஆவது கந்தூரி அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்றது கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் கந்தூரி நிகழ்வுகள் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்

# வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகள்





மதுரங்குளி கனமூலை ரஹ்மத் கிராமத்தில் அமைந்துள்ள நூராணிய்யா பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றன.

மல்லிகை, தாமரை மற்றும் ரோஜா ஆகிய மூன்று இல்லங்களைச் சேர்ந்த 23 மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளை ஆசிரியைகளான எம்.எச்.ரிழ்வானா பேகம், எஸ்.எப்.ரிசாயா ஆகியோருடன் மாணவர்களின் பெற்றோரும், நிர்வாகக் குழுவினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

– எம்.யூ.எம்.சனூன்

# குமரன் முனியாண்டி கௌரவிப்பு



புதிய வளத்தாப்பிட்டி மக்களின் நலனுக்காகக் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அரும்பாடுபட்ட சமூக சேவகரும், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவரும், சங்கங்களின் முன்னாள் தலைவரும், சமாதான நீதவானுமான குமரன் முனியாண்டியை வாழ்த்திப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு புதிய வளத்தாப்பிட்டியில் கோலாகலமாக ஞாயிற்றுக்கிழமை (22) மாலை நடைபெற்றது .

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உப- தவிசாளரும் மல்வத்தை பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புக்களின் ஒன்றியத்தின் செயலாளருமான வி. ஜெயச்சந்திரன் மற்றும் புதிய வளத்தாப்பிட்டி கிராமத்தின் அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வு நாவலர் சனசமூக நிலையத்தில் ஜெயச்சந்திரன் தலைமையில் மிக விமரிசையாக இடம்பெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா

# உபகரணங்கள் வழங்கி வைப்பு




அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் காரியாலயத்துக்கு தேவையான மிகப் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு மிக நீண்ட காலத் தேவையாக காணப்பட்டு வந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் , கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸடீனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந்த உபகரணங்களும், தளபாடங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

– அபு அலா

# வெற்றியாளர்கள் கௌரவிப்பு





கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்படும் மாகாண இலக்கிய விழாவை முன்னிட்டு, இம்மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்; சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள் இலக்கியத் துறை அதிதிகள் என பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

– எம்.ஏ.றமீஸ்

# பயிற்சி






அவசரகால நிலைகளுக்கு முகங்கொடுப்பது தொடர்பான பயிற்சி, சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்றது.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களிடத்தில் மீட்பு மற்றும் மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பதில், இளைஞர்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் நற்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தநிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

– பாறுக் ஷிஹான்

அசாம்

சிறுவர் திருமணம்:

# ஒரே நாளில் 416 பேர் கைது

சிறுவர் திருமணம் தொடர்பாக, அசாமில், ஒரே நாளில் 416 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2012, 2013ஆம் ஆண்டுகளில், அசாமில் சிறுவர் திருமணம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அப்போது அந்த மாநிலத்தில் நடைபெறும் திருமணங்களில் சுமார் 35 சதவீதம் சிறுவர் திருமணம் என்பது தெரியவந்தது. குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளுக்குத் திருமணம் நடைபெறுவது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு



காண்பதற்கு கடந்த 2023ஆம் ஆண்டு, பெப்ரவரியில் சிறுவர் திருமண தடுப்பு நடவடிக்கையை முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான பாஜக அரசு தொடங்கியது. முதல்கட்ட நடவடிக்கையின்போது, 3,483 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4,515 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபரில் இரண்டாம் கட்ட நடவடிக்கையை அசாம் அரசு தொடங்கியது. அப்போது 915 பேர் கைது செய்யப்பட்டனர். 710 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.


தற்போது 3ஆம் கட்டமாக சிறுவர் திருமண தடுப்பு நடவடிக்கையை அசாம் அரசு கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை இரவு தொடங்கியது. இதில் 416 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில், 335 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது சிறுவர் திருமணம் தொடர்பாக அசாமில், இதுவரை 4,814 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேசம்

காதலித்து ஏமாற்றிய காதலனின்

## அந்தரங்க உறுப்பை வெட்டிய காதலி



உத்தரப்பிரதேசத்தில், காதலித்து ஏமாற்றியதால் ஆத்திரமடைந்த காதலி, தனது காதலனின் அந்தரங்க உறுப்பை வெட்டிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேச மநிலம் - முசாபர்நகர் மாவட்டம், சாட்தவாலா கிராமத்தைச் சேர்ந்த இளைஞரும் அதே கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண்ணும் கடந்த 8 ஆண்டுகளாகக் காதலித்து வந்துள்ளனர். இதனிடையே, இருவரின் காதலுக்கும் இளைஞரின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேலும், அந்த இளைஞருக்கு வேறொரு பெண்ணுடன் திருமணம் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வந்துள்ளன.

இந்நிலையில், முசாபர்நகரில் உள்ள ஹோட்டலுக்கு இளைஞன் ஞாயிற்றுக்கிழமை (22), தனது காதலியை அழைத்து வந்துள்ளார். அப்போது, தன்னை காதலித்து ஏமாற்றி தற்போது வேறொரு பெண்ணை திருமணம் செய்யப்போகிறாயா? என காதலழ தனது காதலனிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதல் முற்றிய நிலையில், காதலி தான் மறைத்துக் கொண்டு வந்த கத்தியைக் கொண்டு காதலின் அந்தரங்க உறுப்பை வெட்டியுள்ளார்.

பெங்களூரு

புத்தாண்டு கொண்டாட்டத்தில்

## ஒலிபெருக்கி, பட்டாசுக்கு தடை

பெங்களூருவில், புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஒலிபெருக்கி, பட்டாசு வெடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம், பெங்களூரு நகரில், ஆண்டுதோறும் ஜனவரி 1ஆம் திகதி எம்.ஜி.ரோடு, பிரிகேட் ரோடு, இந்திராநகர் ஆகிய இடங்களில் புத்தாண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

இந்த நிலையில், 2025 புத்தாண்டை வரவேற்கப் பெங்களூரு மக்கள் ஆர்வமாக உள்ளனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க பெங்களூரு மாநகராட்சி, பொலிஸார் புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளனர்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் முக்கிய இடங்களான எம்.ஜி.ரோடு மற்றும் பிரிகேட் ரோட்டில் கண்காணிப்பு கேமராக்களை அதிகரிக்க மாநகராட்சிக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பொலிஸார் வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு,

* புத்தாண்டு கொண்டாட்டத்தை அதிகாலை 1 மணிக்குள் முடித்துவிட வேண்டும்.
* எம்.ஜி.ரோடு, பிரிகேட் ரோடு, இந்திரா நகர் ஆகிய இடங்களில் மட்டும் புத்தாண்டு



கொண்டாட்டத்துக்கு அனுமதி.
* முக்கியமான மேம்பாலங்கள் இரவு 10 மணிக்கு மேல் மூடப்படும்.
* எம்.ஜி.ரோடு, பிரிகேட் ரோட்டில் 800 கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படும்.
* எம்.ஜி. ரோடு, பிரிகேட் ரோட்டில் இரவு 8 மணிக்கு மேல் வாகன போக்குவரத்து நிறுத்தப்படும்.
* புத்தாண்டு கொண்டாட வாகனங்களில் வருபவர்களுக்கு தனி வாகன நிறுத்தம்.
* பெண்களின் பாதுகாப்புக்காக பெண் போலீசார் நியமனம்.
* அதிகாலை 1 மணிக்கு பிறகு மதுபான விடுதிகள், கேளிக்கை விடுதிகளை மூட வேண்டும்.
* பெங்களூருவில் மற்ற பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு அனுமதி கட்டாயம்.
* புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஒலிபெருக்கி, பட்டாசு வெடிக்க தடை

என அதில் கூறப்பட்டுள்ளது.

நைஜீரியா

## அன்னதான நெரிசலில் சிக்கி 32 பேர் பலி



நைஜீரியாவில், கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது நேர்ந்த கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவில், கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் இலட்சக்கணக்கானோர் அங்குப் பட்டினியில் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்நிலையில், அனம்ப்ரா மாகாணம் - ஒகிஜா நகரில், ஞாயிற்றுக்கிழமை (22), கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி அன்ன தானத்துக்குத் தன்னார்வ அமைப்பு சார்பில் பொதுமக்களுக்கு உணவு பொட்டலம் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பெறுவதற்காக ஏராளமானோர் முண்டியடித்துச் சென்றனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசில்

வீட்டின் மீது விமானம் மோதி விபத்து:


## 10 பயணிகள் பலி; இருவர் படுகாயம்

பிரேசிலில், ஞாயிற்றுக்கிழமை (22), வீடொன்றின் மீது விமானம் மோதி விபத்துக்குள்ளானதில், 10 பேர் உயிரிழந்தனர்.

பிரேசில் நாட்டின் ரியோ கிரான்ட் டு சுல் மாகாணத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று, சாலொ பாலோ மாகாணத்துக்கு, ஞாயிற்றுக்கிழமை (22) சென்றுகொண்டிருந்தது. அந்த விமானத்தில் 10 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், சாலொ பாலோ மாகாணம் - கிராமடோ நகர் அருகே பறந்துகொண்டிருந்தபோது, திடீரென கட்டுப்பாட்டை இழந்த விமானம் வீடொன்றுடன் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் விமானம் தீப்பற்றி எரிந்தது.



இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 10 பேரும் உயிரிழந்தனர். அதேவேளை, வீட்டில் இருந்த 2 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்னாபிரிக்காவை வெள்ளையடித்த பாகிஸ்தான்

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் தென்னாபிரிக்காவை பாகிஸ்தான் வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்றிருந்த பாகிஸ்தான், ஜொஹன்னஸ்பேர்க்கில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ண் முறையில் 36 ஓட்டங்களால் வென்று தென்னாபிரிக்காவை அந்நாட்டில் வைத்து வெள்ளையடித்த முதலாவது அணியாக தமது பெயரைப் பதிவு செய்து கொண்டது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

பாகிஸ்தான்: 308/9 (47/47 ஓவ.) (துடுப்பாட்டம்: சைம் அயூப் 101 (94), மொஹமட் றிஸ்வான் 53 (52), பாபர் அஸாம் 52 (71), சல்மான் அக்ஹா 48 (33), தயப் தஹிர் 28 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 3/56, பிஜோன் போர்ச்சுன் 2/56, மார்கோ ஜன்சன் 2/58, கவெனா மபஹா 1/50, கோர்பின் பொஷ் 1/69)

தென்னாபிரிக்கா: 271/10 (42/47 ஓவ. ) (வெ.இ: 308 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 81 (43), கோர்பின் பொஷ் 40 (44), றஸி வான் டர் டுஸன் 35 (52), மார்கோ ஜன்சன் 26 (22), டொனி டி ஸொர்ஸி 26 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுஃபியான் முகீம் 4/52, நசீம் ஷா 2/63, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/70, சைம் அயூப் 1/34, மொஹமட் ஹஸ்னைன் 1/41)

போட்டியின் நாயகன்: சைம் அயூப்

தொடரின் நாயகன்: சைம் அயூப்.

கே.எஸ்.பி.எல் தொடர்:

## சம்பியனான யங் பைட்டர்ஸ்



எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணம்-வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் உள்ளூர் வீரர்களுக்கிடையே நடத்திய தொடரில் யங் பைட்டர்ஸ் அணி சம்பியனானது.

ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற இறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பைட்டர் கிங்ஸை வென்றே யங் பைட்டர்ஸ் சம்பியனானது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## செவிய்யாவை வென்ற றியல் மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் வென்றது.

மட்ரிட் சார்பாக கிலியான் மப்பே, பெடெரிக்கோ வல்வெர்டே, றொட்றிகோ, பிரஹிம் டியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செவிய்யா சார்பாக, இஸாக் றொமெறோ, டொடி லுகெபகியோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## போர்ண்மெத்திடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் வென்றது.

போர்ண்மெத் சார்பாக டெஜன் ஹுய்ஜ்சென், ஜஸ்டின் குளூவேர்ட், அந்தோனி செமென்யோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மேலும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 6-3 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா மற்றும் லூயிஸ் டியஸ் ஆகியோர் தலா 2 கோல்களையும், அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், டொமினிக் ஸபொஸ்லாய் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான

## இங்கிலாந்துக் குழாமில் ஜோ றூட்



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான மற்றும் அதற்கு முன்னதான இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இங்கிலாந்துக் குழாமில் ஜோ றூட் இடம்பெற்றுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரிலேயே இறுதியாக விளையாடியிருந்த றூட், ஓராண்டுக்குப் பின்னர் தற்போதே மீண்டும் ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமொன்றில் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, ஜேமி ஒவெர்ட்டன், பிறைடன் கார்ஸ், சஹிப் மஹ்மூட், ஜேக்கப் பெத்தெல், ஜேமி ஸ்மித் ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ள நிலையில் சாம் கர்ரன், றீஸ் டொப்லி, வில் ஜக்ஸ், மத்தியூ பொட்ஸ் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ஜொஸ் பட்லர் (அணித்தலைவர்), ஜொஃப்ரா ஆர்ச்சர், குஸ் அட்கின்ஸன், ஜேக்கப் பெத்தெல், ஹரி ப்றூக், பிறைடன் கார்ஸ், பென் டக்கெட், ஜேமி ஒவெர்ட்டன், ஜேமி ஸ்மித், லியம் லிவிங்ஸ்டோன், அடில் ரஷீட், ஜோ றூட், சஹிப் மஹ்மூட், பில் ஸோல்ட், மார்க் வூட்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 24, டிசெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.